பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 24 வியாழக்கிழமை 10.11.2022 கதிர் 05

**இனிது ரகசியம் அல்ல!**

கடைசியாக நிறைவேற்றப்பட்ட அரசமைப்பு திருத்தத்தின் படி, மீண்டும் அரசமைப்புஜ் கவுன்ஸில் வருகின்றது.

தேர்தல் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொதுச்

☞2

# அமைச்சுப் பதவிகளுக்கான சூதாட்டம் மீண்டும் ஆரம்பம்!

## எம்.பிக்களை வாங்கும் பேரமும் தொடங்கியது என சஜித் சீற்றம்



கொழும்பு,நவம்பர்11

அமைச்சுப் பதவிகளுக்கான சூதாட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கும் கலாசாரமும் தொடங்கியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சீற்றத்துடன் குறிப்பிட்டார்.

☞2



## சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநருடன் ரணில் பேச்சு

தற்போது எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச சுற்றுச்சூழல் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநருடன் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் சர்வதேச நாணய

☞2

# மக்கள் சுதந்திரத்தை நசுக்குகின்றது அரசு



## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சீற்றம்

கொழும்பு,நவம்பர் 10

நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளான, பேச்சு, கருத்து மற்றும் அமைதியான போராட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரத்தை, அரசாங்கம் ஆணவத்துடன் தொடர்ந்து நசுக்குகிறது என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு

☞2

## புலிகள் புதைத்தவற்றைத் தேட தேவிபுரத்தில் அகழ்வு நடவடிக்கை



(சண்முகம் தவசீலன்)

விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட பொருட்கள் இருப்பதாக தெரிவித்து அகழ்வு பணி

விடுதலை புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட நகைகள் அல்லது ஆயுதங்கள் இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டு தேவிபுரம் 'அ' பகுதியில் உள்ள வீட்டு காணி ஒன்றில் அகழ்வு பணி

☞2

# கட்டுநாயக்காவில் கணினி அமைப்பு திடீரென முடங்கியமையால் குழப்பம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவுத் திணைக்களத்தின் கணினி அமைப்பு மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்பாடு முனையங்களில் இயங்கி வந்த இந்த கணனி அமைப்பு நேற்றுக் காலை 9.00 மணியளவில் திடீரென செயலிழந்தது,

☞2

## ஹெரோயினுடன் ஐவர் பளையில் பிடிபட்டனர்

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பகாம பகுதியில் உயிர்கொல்லி ஹெரோயின் பாவனை இடம்பெறுவதாக பளை பொலிஸாருக்குக் கிடைக்கபெற்ற இரகசிய தகவலையடுத்து சந்தேக நபர்களின் வீட்டை சுற்றிவளைத்த போது 600 மில்லி கிராம் ஹெரோயினுடன் 05 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு,

☞2

# சுற்றுலாத்துறையைச் சீர்குலைக்கும் போராட்டங்கள் தேசத்துரோகமாம்!

## சரத் வீரசேகராவின் கண்டுபிடிப்பு இது!



சுற்றுலாத்துறையை சீர்குலைக்கும் வகையில் போராட்டங்களை மேற்கொள்வது தேசத்துரோக செயற்பாடு என சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏற்றுமதி வருமானத்திற்கு அப்பால் நாட்டுக்கு அந்நிய செலாவணி அதிகமாக

☞2

## மத்திய இத்தாலியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!

இத்தாலியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவாகியுள்ளது.

மத்திய இத்தாலியின் ரிம்மினியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைஅண்டைநாடுகளும்உணர்ந்துள்ளன.

நிலநடுக்கத்தால் யாருக்கும் பாதிப்புக்கள்

☞2

# கூடிப் பேசிக் கலைவது மட்டும்தான் இந்த நாடாளுமன்றில் நடக்கின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்

கொழும்பு,நவ.10

நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் அத்தியாயமொன்று இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும், நாளுக்கு நாள் கூடி, விவாதங்களை நடத்தி, நாட்டை அலைக்கழித்து, கலைந்து செல்வதை தவிர நாட்டைக் கட்டியெழுப்பும் எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில்

☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை ஆணைக்குழு, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, ஊழல் - மோசடி பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு, நிதி ஆணைக் குழு, எல்லை நிர்ணய ஆணைக் குழு, தேசிய சுவீகரிப்பு ஆணைக்குழு, தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழு, கொழும்பு நகர பொருளாதார ஆணைக் குழு ஆகிய ஆணைக் குழுக்களுக்கு உரிய ஆணையாளர்களையும் தலைவர்களையும் தெரிவு செய்யும் பொறுப்பு புதிய அரசமைப்பு திருத்தத்தின் கீழ் மீண்டும் இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கே வழங்கப்படுகின்றது.

இந்த அரசமைப்பு கவுன்ஸில் 10 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களின் விவரம் வருமாறு :-

1. சபாநாயகர்.
2. பிரதமர்.
3. எதிர்க்கட்சித் தலைவர்.
4. ஜனாதிபதி நியமிக்கும் அவரின் பிரதிநிதியான எம்.பி. ஒருவர்.
5. அரசு தரப்பில் இருந்து எம்.பி. ஒருவர்.
6. எதிர்க்கட்சி தரப்பில் இருந்து எம்.பி. ஒருவர்.
7. பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் கட்சி சாராத எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர்.
8.,9.,10. மூன்று பொதுவான கௌரவ பிரமுகர்கள்.

இந்தப் பத்து பேரில் முதல் மூவரும் பதவி வழி உறுப்பினர்கள். (சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சி தலைவர்)

நாலாவது பிரதிநிதியை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். மூத்த அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டி சில்வாவை இந்தப் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே நியமித்து விட்டார்

அடுத்த ஆறு பேரையும் பிரதமரும், எதிர்கட்சித்தவர் தலைவரும் இணக்கமாக ஒன்றுபட்டு நியமிக்க வேண்டும்.

இதில் ஆளும் தரப்பு எம்.பியின் பெயரை பிரதமரும், எதிரணித் தரப்பு எம்.பியின் பெயரை எதிர்க்கட்சித் தலைவரும் பிரேரிக்க, அது ஏகமனதாக ஏற்கப்படுவது ஏற்பாடு.

மற்றைய மூன்று கௌரவ பிரமுகர்களையும் பிரதமரும், எதிர்க்கட்சி தலைவரும் சேர்ந்து இணக்கத்தோடு பேசித் தீர்மானிப்பார்கள்.

அதற்கடுத்து எஞ்சி இருக்கின்ற ஓர் உறுப்பினர் பதவிதான் நமக்கு (தமிழர்களுக்கு) முக்கியமானது. ஆளும் பிரதமரின் தரப்பிலும், எதிர்க்கட்சித் தலைவரின் தரப்பிலும் இல்லாத இன்னொரு எதிர்க் கட்சி என்பதால், அது இன்றைய நிலையில் உத்தியோகபூர்வ ரீதியில் 10 எம்பிக்களை வைத்திருக்கும் இலங்கைத் தமிழரசு கட்சிக்கு உரியது. அந்தக் கட்சியினர் தான் தமக்குள் ஒருவரைப் பிரயோகிக்க வேண்டும்.

19ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்த போது, அதன் கீழான அப்போதைய அரசமைப்புக் கவுன்ஸிலில் சம்பந்தன் அந்தப் பதவியை வகித்தார். இப்போது அவரால் இயலாத நிலமை. வேறு ஒருவருக்குத் தான் அது வழங்கப்பட வேண்டும்.

நிச்சயம் அதற்கு சுமந்திரன் நியமிக்கப்பட முடியாது. அதற்குக் காரணம் உண்டு. சுமந்திரனும் அதனை விரும்பார்.

சுமந்திரன் இப்போது நீதிமன்றத்தில் வாதிடும் தொழில் ரீதியான சட்டத்தரணி. இந்த அரசமைப்புக் கவுன்ஸிலே, பிரதம நீதியரசர், நீதியரசர்களின் நியமனங்கள், பதவியேற்பு போன்றவற்றுக்கும் பரிந்துரைகள் வழங்கி, அங்கீகாரம் செய்யும் உரித்துடையது.

அந்தக் கவுன்ஸிலில் சுமந்திரன் இடம் பெற்றால், அவர் அச்சமயத்தில் நீதிமன்றத்தில் சட்டரீதியாக முன்னிலையாகி வாதிடும் இயற்கை நியாயத்தை இழந்து விடுவார். ஆகவே இந்த உறுப்பினர் பதவியை சட்டத்தரணியாக தொழில் செய்யும் சுமந்திரன் ஏற்க முடியாது

இன்றைய நிலையில் தமிழரசு கட்சியின் எம்.பி.களில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் செல்வம் அடைக்கலநாதன் அல்லது சித்தார்த்தன் அதற்கு நியமிக்கப்பட கூடும்.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் பிரதிநிதி நிமால் ஸ்ரீபால டி சில்வா ஆகிய இந்த கவுன்ஸிலின் முதல் நான்கு உறுப்பினர்களும், கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகர் தலைமையில் நாளை உத்தியோகப்பற்றற்ற முறையில் கூடுகின்றார்கள். கவுன்ஸிலின் ஏனைய ஆறு உறுப்பினர்களையும் ஏகமனதாகத் தேர்வு செய்யும் நடவடிக்கைகளை அவர்கள் நாளை எடுப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அப்படிப் பத்துப் பேரும் தெரிவாகி, அந்த அரசமைப்புக் கவுன்ஸிலை ஜனாதிபதி அங்கீகரித்ததும் அது முழு அளவில் செயல்படத் தொடங்கும்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட மேற்படி சுயாதீன ஆணை குழுக்களுக்குப் பொருத்தமான ஆணையாளர்களை அரசமைப்பு கவுன்ஸில் நியமிக்கும்.

அந்த நியமனங்களை ஜனாதிபதி ஏற்று அங்கீகரித்ததும், அதுவரையில் அந்த விடயங்களை தற்போது வரை கையாண்ட சுயாதீன ஆணை குழுக்கள் தம்பாட்டிலேயே செயல் இழக்கும். புதிய ஆணைக்குழுக்கள் அதிகாரத்துக்கு வரும்.

ஆக, புதிய அரசமைப்புக் கவுன்ஸில் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும், இப்போதைய ஆணை குழுக்கள் எல்லாம் - தேர்தல் ஆணைக்குழு உட்பட - செயலிழந்து போகும்.

இவைதான், இப்போதைய சட்டத்தில் இந்த அரசமைப்பு கவுன்ஸில் குறித்து நாம் அறிய வேண்டிய பூர்வாங்க விடயங்கள் ஆகும்.

- மின்னல் -

## அமைச்சுப் பதவிக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதவாச்சியில் இடம்பெற்ற தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு தேவையான பெரும்பான்மையை உருவாக்கிக் கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கும் இவர்களின் செயற்பாட்டிற்கு மத்தியில், நாட்டின் சாதாரன மக்களுக்கு அன்றாட உணவு வேலையைத் தேடிக் கொள்வது சவாலாக மாறி உள்ளதாகவும்,அதற்கு அப்பால் தொழிலின்மை,போக்கின்மை போன்ற காரணங்களால் மக்களின் வாழ்வு சீரழிந்து, நாட்டில் பொது மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

இன்றைய அரசாங்கத்திற்கு ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாப்பது மாத்திரமே தேவைப்பட்டுள்ளதென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சஜித்துக்கு சேவை செய்வதற்கு பணம் எங்கிருந்து கிடைக்கின்றது என்று கடந்த காலங்களில் கேள்வி எழுப்பியமையைத் தாம் அறிவார் எனவும், அவ்வாறனவர்களுக்கு சொல்லக் கூடிய இலகுவான பதிலானது, சஜித் பிரேமதாஸ ஒரு போதும் 10 வீதம் 20 வீதம் என்று கொமின் எடுக்காதவர் என்பதால் செல்வந்தர்கள் தயக்கமின்றி வேலைத்திட்டங்களுக்கு தேவையான பணத்தை வழங்குகிறார்கள் என்பதுதான் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறு கிடைக்கும் பணத்தைக் கூட நேரடியாக எடுக்காமல் சம்பந்தப்பட்ட பஸ் நிறுவனம்,கணனி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதால் வெளிப்படத்தன்மையொன்றுஇருப்பதாகவும்,அதனால் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

ஏனைய கட்சிகள் கைவாறு அடித்துக் கொண்டாலும் நடைமுறையில் மக்களுக்கான வேலைத்திட்டங்களை செய்து காட்டியிருப்பது தற்போதைய எதிர்க்கட்சி தான் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## மக்கள் சுதந்திரத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகக் குரல் கொடுக்கும் மற்றும் அவற்றுக்கு எதிராக அமைதியான போராட்டங்கள் அல்லது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தும் மனித உரிமைகளுக்கான போராட்டக்காரர்களுக்கு எதிராக தற்போதுள்ள அரசாங்கத்தால் நடத்தப்படுவது கொடூரமான மற்றும் சகிக்க முடியாத அடக்குமுறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதுமட்டுமின்றி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறான மற்றும் நியாயமற்ற முறையில் பயன்படுத்துவதற்கும், சமூகத் தலைவர்கள் மற்றும் அத்தகைய கொள்கைகளுக்காக அமைதியான எதிர்ப்பில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்கும் நாங்கள் அரசாங்கத்தை கண்டிக்கவிரும்புகிறோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் பிக்கு மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் உட்பட மூவர், அவர்கள் மீது தெளிவான குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் அநியாயமான முறையில் 75 நாள்களுக்கும் மேலாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கர்தினால் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

இந்த வகையான நெறிமுறையற்ற நடைமுறையை எந்த சூழ்நிலையிலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இருவரும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது என்பதையும் குறிப்பிட்டார்.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை, எவ்வித தீவிர உணர்வும் இன்றி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுதலை செய்ய பரிந்துரைக்கப்படும் முறையற்ற விதம் குறித்தும் எமது ஆச்சரியத்தை வெளிப்படுத்த விரும்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(விவரமான செய்தி 13ஆம் பக்கத்தில்)

## கட்டுநாயக்காவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் பயணிகளின் குடிவரவு, குடியகல்வுப் பணிகள் தாமதமாகின. விமான நிலையத்தில் வந்திறங்கிய பயணிகள் வெளியேற முடியாமல் விமான நிலையத்தில்முடங்கவேண்டியதாயிற்று.

எனினும்திணைக்கள அதிகாரிகளால் பிற்பகல் 1.00 மணியளவில் மீண்டும் கணினி அமைப்பை வழமைக்குக் கொண்டு வர முடிந்தது.

## கட்டுநாயக்காவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் வழியாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது என்றும் சரத் வீரசேகர சுட்டிக் காட்டினார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட நெருக்கடி மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை என்பன இன்று மீண்டு வருவதாக சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

ஆகவே போராட்டங்களை மீண்டும் நடத்திஅதனைகுழப்பியடிக்கவேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால் அது தேசத் துரோக செயற்பாடு என்றும் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

## கூடிப் பேசிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் யாது என வெளியிட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாடு வீழ்ந்துள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் தெரிவித்தார்.

போசாக்கின்மையால், பட்டினியால் சிறுவர்கள் வாடி பாடசாலைகளில் மயங்கி விழுகின்றனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவற்றை அம்பலப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை கைவசம் வைத்துக் கொண்டு ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்டார் என்ச்க் கூறிய கூற்றொன்றை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அந்தப் பணம் தற்போது எங்கே உள்ளது என்றும் கேள்வி எழுப்பினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் கூட இன்று மாறினாலும், அரசாங்கத்தின் கொள்கைகள் மாறாதுள்ளமை வருத்தத்தையும் துயரத்தையும் அளிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இத்தனைக்கும் மத்தியில் பல்வேறு அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், இந்த முட்டாள்தனமான அரசில் இணைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எவரும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் பொறாமையும் கபடமும் நிறைந்த அரசாங்கத்தால் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், பொருளாதாரத்தைச் சுருக்கி நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற மாயையை முன்வைத்து அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகள் அதிகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சர்வதேச நாணய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியத்தின் நிர்வாக இயக்குநருடன் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கலந்துரையாடினர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## புலிகளின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளால் பொருப்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றன எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் நேற்று அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன்.

அகழ்வு பணியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், கிராம அலுவலர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் ஐவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்மபுரம் மற்றும் பளை - தம்பகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

கைதானவர்கள் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தவுள்ளனர் என பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## மத்திய இத்தாலியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏதும் ஏற்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், நிலநடுக்கம் காரணமாக நாட்டில் பல வீதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இந்நிலையில், ரயில் பாதையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, புஜஉலிஜழி நகரில் ரயில் சேவையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், நிலநடுக்கத்தால், மார்ச்சி பகுதியில் உள்ள பல பாடசாலைகளை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

ஐரோப்பாவில் நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக மத்திய இத்தாலி அடையாளம் காணப்பட்டுள்ளது.

2016 முதல், மத்திய இத்தாலியில் நிலநடுக்கங்களில் 299 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com

# வாக்குறுதி வழங்கும் அரசியலை சட்டத்தினால் ஒழிக்க வேண்டும்!



## உதய கம்மன்பில கோரிக்கை

தற்போதைய அரசாங்கம் எப்பொழுதும் கடனில் மூழ்கியுள்ள போதிலும் அடுத்த தேர்தலுக்கான வாக்குறுதி அரசியலை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்தார்.

புதிய சட்டத்தை அல்லது வாக்குறுதி வழங்கும் அரசியல் கலாசாரம் அகற்றப்படாவிடின், அடுத்த தேர்தலில் வெற்றிபெற அரசியல்வாதிகள் அடுத்த தலைமுறையை அடகு வைப்பார்கள் என்றார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலவச மதிய உணவு, மாவட்டம் தோறும் பல்கலைக் கழகம், வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை போன்ற வாக்குறுதிகள் அதில் அடங்கும் எனக் கூறினார்.

## கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்குத் திரும்பியது!

கடவுச்சீட்டு விநியோகம் வழமை போன்று நேற்று (புதன்கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் கணனி அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்றுமுன்தினம் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கோளாறு நேற்று முன்தினம் இரவு சரி செய்யப் பட்ட நிலையில் கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டுப் பிரஜை மீது வாள்வெட்டு தாக்குதல்!

ஆலய நிர்வாகத்தின் பண மோசடி உள்ளிட்டவை தொடர்பில் வடமாகாண ஆளுநர் தலையிட்டு தீர்வொன்றைப் பெற்றுத் தர வேண்டும் என கோரிய வெளிநாட்டு பிரஜை மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள முருகன் ஆலயம் ஒன்றின் நிர்வாகத்தினர் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என ஆஸ்திரேலியாவில் இருந்து திரும்பிய அந்நாட்டு பிரஜை ஒருவர் வடமாகாண ஆளுநரை நேரில் சந்தித்து முறையிட்டு இருந்தார்.

இந்நிலையில் நேற்று (புதன்கிழமை) காலை அவரது வீட்டுக்குள் புகுந்த மூவர் அடங்கிய குழு அவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கையில் குரங்கு அம்மை இரண்டாவது நபர் அடையாளம்!

குரங்கு அம்மை வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக சந்தேகிக்கப்படும் மற்றுமொரு நோயாளி கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் டுபாயில் இருந்து இலங்கைக்கு வந்த 42 வயதுடையவர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர் அங்கொட தொற்று நோயியல் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## உலகிற்கே அரிசி வழங்குகின்ற மாகாணமாக கிழக்கு மாகாணத்தை மாற்றியமைக்க முடியும்!

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



உலகிற்கே அரிசி வழங்கும் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை மாற்ற முடியும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை மட்டக்களப்பில் உள்ள அவரது பங்களாவில் சந்திப்பின் போது தூதுவர் உறுதியளித்துள்ளார் என ஆளுநர் தெரிவித்தார்.

இந்த விசேட சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், கிழக்கு மாகாண சுற்றுலா துறை தலைவர், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது கிழக்கு மாகாணம் விவசாயத்தை பிரதானமாக கொண்டுள்ளதால் விவசாயத்தினூடாக மாகாணத்தை தன்னிறைவுடைய மாகாணமாக பிரகடனப்படுத்த முடியும் என அவர் எதிர்பார்க்கிறார் எனவும் உலகிற்கே அரிசி வழங்கும் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை மாற்ற முடியுமெனவும் நம்பிக்கை தெரிவித்ததுடன், இலங்கையின் கடன் மறுசீரமைப்பை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான சகல வசதிகளையும் அமெரிக்க அரசாங்கம் ஏற்படுத்தி கொடுக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தம்மிடம் உறுதியளித்துள்ளார் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் பலரது கைகளில் உள்ளதாம்!

நாடாளுமன்ற நிதிக்குழுவிற்கு வழங்கப்படாத சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் பலரது கைகளில் உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார்.

வரிச் சட்டமூலம் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் பேசிய அவர், அறிக்கையில் உள்ள முக்கிய விடயங்கள் அவர்களுக்கு சாதகமாக அமையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் நிதிக்குழுவிடம் கொடுக்க முடியாத அறிக்கை மற்றவர்களுக்கு எப்படி சென்றது என்றும் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இந்த ஆவணத்தை படித்து மக்களை பயமுறுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.




நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறும் ஹர்ஷ டி சில்வாவிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

## இந்திய உயர் ஸ்தானிகருடன் இ.தொ.கா. கலந்துரையாடல்!




இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து, ரென்ரா தோட்டங்களில் குடியேறியுள்ள பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினை தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிற்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்றவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் கூட்டுப் பொறுப்பு இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு அரசாங்கங்களுக்கும் உண்டு.

மேலும் மலையகத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 10 ஆயிரம் வீடுகள் தொடர்பாகவும், பெருந்தோட்ட இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இந்திய ஆசிரியர்களை நியமித்து, புதிய பாடநெறிகள் ஆரம்பிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இ.தொ.காவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என இதன் போது இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் அரசியல் பிரிவுக்கான முதன்மைச் செயலாளர் பானு ஆகியோர் தெரிவித்தனர்.

## கொழும்பு துறைமுக மேற்கு முனைய நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின!

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் நேற்று (புதன்கிழமை) ஆரம்பமாகியுள்ளன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரின் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

03 வருடங்களுக்குள் மேற்கு முனைய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக இந்தியாவின் அதானி குழுமம் 70 கோடி அமெரிக்க டொலர் நிதியை முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உள்ளூராட்சித் தேர்தல்

**உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போடுவதற்கான ஆளும் தரப்பின் எத்தனத்தின் ஒரு கட்டமாகவே உள்ளூராட்சி சபைகளின் மீள் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்ற தகவலை அந்தப் புதிய ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மறுத்துரைத்திருக்கின்றார்.**

**நடக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தலை இப்போது நியமிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய குழு கட்டுப்படுத்தாது, தடுக்காது, அந்தத் தேர்தலை ஒத்திவைக்கவும் தள்ளிப் போடவும் அது ஏதுவாக அமையாது என்றெல்லாம் தெரிவித்திருக்கின்றார் மஹிந்த தேசப்பிரிய.**

**அவர் கூறுவது உண்மையானால் – அதுதான் நிஜ நிலைமை என்றால் – நல்லது.**

**“நாங்கள் (எல்லை நிர்ணய ஆணைக்குழு) எங்கள் பாட்டில் எங்கள் வேலையைப் பார்ப்போம்; அவர்கள் (தேர்தல் ஆணைக்குழு) தம்பாட்டில் தேர்தல் நடத்தும் வேலையை பார்க்க வேண்டியதுதானே!” – என்ற சாரப்பட மஹிந்த தேசப்பிரியவின் பதில் அமைந்திருக்கின்றது.**

**தற்போது உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உள்ள சட்ட ஏற்பாடுகளை இடைநிறுத்தவோ, மாற்றவோ முயற்சி எடுக்கப்படாத வரை, அந்தத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியும், அதனை எல்லை மீள் நிர்ணய ஆணைக் குழுவின் நியமனம் எந்த வகையிலும் தடுக்காது, பாதிக்காது என்று அவர் சுட்டிக் காட்டுகின்றமை மறுக்க முடியாத உண்மை தான்.**

**ஆனால், இந்தத் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய காலமும் அதிகாரமும் தேர்தல் ஆணையத்துக்குக் கிட்டிய பின்னரும், அதை முன்னெடுக்காது தேர்தல் ஆணையம் காலத்தை இழுத்தடித்துக் கடத்தி வருகின்றது. இது, இந்தத் தேர்தலைத் தள்ளிப் போடும் அரசுத் தரப்பினரின் முனைப்புக்கு வாய்ப்பும், கால அவகாசமும் அளிக்கும் தந்திரோபாயம் என்று விடய மறிந்த பலரும் அஞ்சுவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.**

**‘இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போகிறீர்களா, இல்லையா? ஆரம்பிப்பீர்களாயின் எப்போது?’ என்று தேர்தல் ஆணையத்திடம் உத்தியோகபூர்வமாகக் கேட்கும் கடிதம் ஒன்றை பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓரிரு நாளில் தேர்தல் ஆணையத்துக்கு ஒப்படைக்கத் தீர்மானத்திருக்கின்றன.**

**இந்தக் கடிதத்துக்கு கிடைக்கும் பதிலின் அடிப்படையில் – அல்லது கிடைக்காமல் போகும் பதிலின் காரணத்தில் – உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தை மேல்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டு போய் நீதிமன்றக் கட்டளை ஒன்றைப் பெற்று, தேர்தல் நடத்துவதை நீதிமன்றம் மூலம் உறுதிப்படுத்தும் முயற்சியை எடுக்க எதிர்க்கட்சிகள் தயாராகி விட்டன என்றும் தெரிகின்றது.**

**கடைசியாக நீதிமன்றத்தின் வலியுறுத்தலில்தான் – காட்டமான வழிகாட்டலில்தான் – இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.**

# சர்வதேசப் பாடசாலைகள் கண்காணிப்பு அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்காம்!

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்



நாட்டில் 300 இற்கும் மேற்பட்ட சர்வதேச பாடசாலைகள் இயங்கிவருகின்றமையுடன் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

ஆனால் அந்த பாடசாலைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கை எதுவும் இதுவரை நாட்டில் மேற்கொள்ளப்படவில்லை. என்றாலும் அடுத்தவருடம் முதல் சர்வதேச பாடசாலைகளைக் கண்காணிக்கும் வேலைத் திட்டத்தை தயாரித்துள்ளோம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிலையியற்கட்டளை 27 இன் 2 கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால், சர்வதேச பாடசாலைகளின் தரம், அதில் கல்வி கற்கும் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

நாட்டில் 300 இற்கும் மேற்பட்ட சர்வதேச பாடசாலைகள் இயங்கிவருகின்றன. அதில் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர்.

இந்த மாணவர்கள் பெரும்பாலும் எமது நாட்டு பிள்ளைகளாவர். இந்த பாடசாலைகள் கம்பனி சட்டத்தின் கீழே பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அதனால் இதுவரை காலமும் சர்வதேச பாடசாலைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதனால் சர்வதேச பாடசாலைகளைக் கண்காணிக்கும் வேலைத்திட்டத்தை நாங்கள் தற்போது தயாரித்திருக்கின்றோம். அதன் பிரகாரம் 2 பிரிவுகளின் கீழ் அதனை செய்ய எதிர்பார்க்கின்றோம்.

ஆரம்பமாக கல்வி அமைச்சின் கீழ் இருக்கும் தனியார் பாடசாலை பிரிவில் சர்வதேச பாடசாலைகள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். இதன்போது அனைத்து தரவுகளும் வழங்கப்படவேண்டும்.

அடுத்ததாக சர்வதேச பாடசாலைகளின் தரம் தொடர்பில் தேசிய கல்வி ஆணைக் குழுவால் கண்காணிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனால் சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் கண்காணிக்கும் நடவடிக்கையை அடுத்த வருடம் ஆரம்பத்தில் இருந்து மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஆனால் பதிவு செய்யும் நடவடிக்கையை உடனே மேற்கொள்ளாமல், அந்த பாடசாலைகளின் தரம், அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தரம் போன்ற விடயங்களை ஆராய்ந்து பார்த்தே பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம். – என்றார்.

# யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட குற்றத்தில் இருவர் கைது!

யாழ்ப்பாணத்தில் வழிப்பறி கொள்ளைகள் அதிகரித்துள்ள நிலையில், இருவேறு வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர், வீதியில் சென்ற பெண்ணொருவரின் 3 லட்சம் ரூபா பெறுமதியான தங்க சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இளவாலை பகுதியை சேர்ந்த 19 வயது இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

அதேவேளை, கொடிகாமம் பொலிஸ் பிரிவிக்கு உட்பட்ட அல்லாரை பகுதியில் பெண்ணொருவரின் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க சங்கிலி வழிப்பறி கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர், பல கொள்ளை மற்றும் களவு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வல்லை பகுதி மற்றும் அச்சுவேலி வைத்தியசாலை வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வரும் வழிப்பறி கொள்ளையர்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படும் நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# டீசல் மற்றும் மண்ணெண்ணெயால் கூட்டுத்தாபனத்துக்கு நட்டமாம்!

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தைச் சந்தித்து வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

டீசல் லீற்றருக்கு 12 ரூபாவும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 22 ரூபாவும் நஷ்டம் ஏற்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க குறிப்பிட்டார்.

இம்முறை எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படாமை தொடர்பில் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



# 965 மாணவர்களுக்கு ரூ.35 லட்சம் பெறுமதிக்கு கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள்!

## தாயகம் நிறுவனத்தின் மாதாந்த உதவி வழங்கும் திட்டத்தில் வழங்கல்









தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வடமாகாணத்திலுள்ள 14 பாடசாலைகள், முல்லைத்தீவிலுள்ள 05 பாடசாலைகள், வவுனியாவிலுள்ள 07 பாடசாலைகள், கிளிநொச்சியிலுள்ள 02 பாடசாலைகள் ஆகியவற்றில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுள் மொத்தமாக 965 பாடசாலை மாணவர்களுக்கு 35 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் புத்தகபைகள் என்பன யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. இந் நிகழ்வு 'தாயகம்' அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதன் நிர்வாகியுமான கலாநிதி சிறிதரன் தலைமையில் நடைபெற்றது



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஸ்திரப்படுத்தியுள்ளார்!

## ராஜித புகழாரம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவு தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சிகளைத் தாம் பாராட்டுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஓரளவு இயல்பு நிலை திரும்புவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆற்றிய பங்களிப்பை பொது மக்களும் அங்கீகரித்துள்ளனர் என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள முயற்சிப்பதாக வெளியாகும் குற்றச்சாட்டு தொடர்பாக உறுதியான பதிலை ராஜித சேனாரத்ன வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை வீடியோ எடுத்த இளைஞன் நையப்புடைப்பு!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவர் குளிப்பதை வீடியோ எடுத்த இளைஞனை அயலவர்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சிறுமி ஒருவர் வீட்டில் குளித்துக்கொண்டிருந்த வேளை , இளைஞர் ஒருவர் அதனைத் தனது கையடக்க தொலைபேசியில் வீடியோ எடுத்துள்ளார்.

அதனை அவதானித்த சிறுமி கூக்குரல் இடவே அயலவர்கள் ஒன்று கூடி வீடியோ எடுத்த இளைஞனை மடக்கி பிடித்து நயப்புடைத்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# வியட்நாம் – சிங்கப்பூர் எல்லையில் விபத்துக்குள்ளான படகில் மீட்கப்பட்டவர்களில் 76 பேர் யாழ்ப்பாணத்தவர்!

சிங்கப்பூருக்கு அருகில் சர்வதேச கடற்பரப்பில் தத்தளித்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் 76 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மலேசியாவிற்கு விமானம் மூலம் வேறு நாட்டுக்குச் செல்வதற்காகவே இந்தக் கப்பலில் இந்தக் குழுவினர் சென்றுள்ளனர் எனவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்தில் மீட்கப்பட்ட 303 இலங்கையர்களும் தற்போது வியட்நாம் தலைநகர் ஹனோயில் இருந்து 1,800 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வுங் தாவோ துறைமுகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூருக்கு அருகிலுள்ள கடலில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் சகல பஸ்களும் முகமாலையில் சோதனை!

யாழ் – கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களின் வழித்தட அனுமதி, சாரதி அனுமதிபத்திரம் என்பன நாளை (வெள்ளிக்கிழமை) முதல் முகமாலையில் பரிசோதிக்கப்பட உள்ளதாக வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினரும் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான சி.சிவபரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது நாளை (வெள்ளிக்கிழமை) முதல் கொழும்பு – யாழ்ப்பாண இரவு சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தினதும் வழித்தட அனுமதி பத்திரங்கள், சாரதி அனுமதிபத்திரம் முகமாலையில் பரிசோதிக்கப்படுவது எனவும் அதேபோல புளியங்குளப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் அனைத்து பஸ்களும் 20 நிமிடங்கள் நிறுத்தி மீண்டும் பயணிக்க அனுமதிக்கப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கைதடியில் உள்ளூராட்சி அமைச்சில் உள்ளூராட்சி செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டதாகவும் எனவே, நாளையில் இருந்து யாழ்ப்பாண கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ் உரிமையாளர்கள் தங்களுடைய வழித்தட அனுமதிப்பத்திரம் மற்றும் விசேட சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை தங்களுடன் உடைமையில் வைத்திருப்பது மிகவும் அவசியமெனவும் அது தவறும் பட்சத்தில் பொலிஸார் மற்றும் வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு பயணித்த பஸ் வவுனியாவில் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார படுகொலையாளியான பஷில் அமெரிக்காவில் சுகபோகம் வரியால் மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவது எவ்விதத்தில் நியாயம்?

## அநுரகுமார கேள்வி



பொருளாதார படுகொலையாளியான பஷில் ராஜபக்ஷ அமெரிக்காவில் சுகபோகமாக வாழும் போது நாட்டு மக்களை வரி அதிகரிப்பால் நெருக்கடிக்குள்ளாக்குவது எந்த விதத்தில் நியாயமானதாகும்.

பொருளாதார நெருக்கடியால் தோற்றம் பெறும் மக்கள் போராட்டம் பாரிய விளைவை ஏற்படுத்தும் என மத்திய வங்கியின் ஆளுநர் எச்சரித்துள்ளார்.

ஆகவே மக்கள் போராட்டத்தைத் தடுக்கும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில், நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். பணவீக்கம் 70 சதவீதமளவில் உயர்வடைந்துள்ளதால் பொருள் மற்றும் சேவைக் கட்டணம் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

வாழ்க்கை செலவு அதிகரிப்பால் நடுத்தர மற்றும் தோட்ட புறங்களில் வாழும் மக்களின் சுகாதாரப் போசாக்கு தன்மை பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

நடுத்தர மக்களின் போசனை மட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு பாடசாலை மாணவர்களின் கல்வித்துறையில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தோட்டப் புற மக்களின் குறைந்த வருமானம் தற்போதைய வாழ்க்கை செலவிற்கு எந்தவிதத்திலும் ஈடு செய்யும் வகையில் அமையவில்லை. மறுபுறம் இறக்குமதி தடையால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சமூகத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் அரச நிறுவனங்கள் வெளியிடும் ஆய்வு அறிக்கைக்கும், சமூகத்தின் உண்மை நிலைவரத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாட்டில் 54 லட்சத்துக்கும் அதிகமானோர் மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளார்கள் என யுனிசெப் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் அரசாங்கம் இந்தத் தரவுகளுக்கு முரணாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பு ஒட்டுமொத்த மக்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாகக் காணப்படுகிறது.

நுவரெலியா உள்ளிட்ட பெருந்தோட்ட பிரதேசங்களின் பிள்ளைகள் மந்த போசனை பாதிக்கப்பட்டுள்ளனர். எமது உறவுகள் போசனை மட்டத்தில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டு மக்கள் எதிர்க்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அவர் உலகத்தை வலம் வருகிறார். மருந்து தட்டுப்பாடு மருத்துவ துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலவச மருந்து விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால் நடுத்தர மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். தனியார் மருந்தகங்களில் கூட மருந்து தட்டுப்பாடு உள்ள நிலையில் ஜனாதிபதி எகிப்து சென்றுள்ளார்.

நாட்டின் உற்பத்தி துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. தனியார் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளார்கள். நடுத்தர மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

அனைத்து வியாபார தொழிற்துறைகளும் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. நாட்டு மக்கள் வாழ்கையில் பெரும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் எந்த விதத்தில் தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றி விட்டோம் என அரசாங்கம் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

21ஆவது திருத்தம் சமூக பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். நாட்டு மக்கள் எந்தக் பிரச்சினையும் இல்லாமல் வாழ்கிறார்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார். அவருக்கு ஏற்றாற் போல் அரசாங்கமும் செயற்படுகிறது.

அரசாங்கம் அண்மையில் பல வரிகளை அதிகரித்துள்ளது. வரி அதிகரிப்பு நாட்டு மக்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது.

பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழித்து வரியை சடுதியாக அதிகரிப்பது எந்தளவிற்குப் பொருத்தமானது. பொருளாதார படுகொலையாளியான பஸில் ராஜபக்ஷ, அமெரிக்காவில் சுகபோகமாக வாழும் போது வரி அதிகரிப்பால் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்றமை எந்தளவிற்கு நியாயமானது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தான் நன்றாக செய்தேன் என ஊடகங்கள் ஊடாக மீண்டும் வெளிவந்துள்ளார். இயற்கை காரணிகளால் பொருளாதாரம் பாதிப்பிற்குள்ளாகவில்லை என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியாளருக்கு தண்டனை வழங்குவதாகக் குறிப்பிட்டவர்கள் தற்போது அவரையே தமது தலைவராக நியமித்துள்ளமை எந்த வகையிலான அரசியலாகும். அரச நிதியை மோசடி செய்தவர்கள் சுதந்திரமாக உள்ள போது தொழிற்துறையினர் மீது கடுமையான வரி அதிகரிப்பது நியாயமானதா?

பொருளாதாரப் பாதிப்பால் படித்த தொழிற்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்த இரண்டு விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

வங்கி கட்டமைப்பில் தேர்ச்சிப் பெற்றவர்களில் பெரும்பாலானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகத்தை வலம் வருகிறார்.

கல்வி பொதுத்தராதர சாதாரன தர பரீட்சை தகைமையில்லாத ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில்வாய்ப்புக்களை வழங்குதாக பொதுஜன பெரமுன தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியது. 34 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனம் வழங்கபட்டுள்ளது.

அவர்களுக்கு 22 ஆயிரம் மாத சம்பளம் வழங்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார பாதிப்பிற்கு மத்தியில் 22 ஆயிரம் எந்தளவிற்கு சாத்தியமாக அமையும். பொதுஜன பெரமுன தமது தேர்தல் வெற்றிக்காக நடுத்தர மக்களின் எதிர்காலத்தை முழுமையாக இல்லாதொழித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து அரசாங்கம் தனக்கு எதிரான அடக்கு முறைகளை எவ்வாறு முடக்குவது என்பது தொடர்பாக மாத்திரம் அவதானம் செலுத்துகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத்தின் தலைவர் உட்பட மத குரு ஒருவர் மூன்று மாத காலத்துக்கு மேல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை இவ்வாறு தடுத்து வைப்பதற்கான காரணத்தை அரசாங்கத்தின் உறுப்பினர்களால் குறிப்பிட முடியுமா?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் போது அந்த நபரின் எதிர்காலம் முழுமையாக பாதிக்கப்படும் என்பதைப் பற்றி சற்றும் சிந்திக்காத உறவுகளின் உணர்வு தொடர்பில் உணர்வற்றவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கிறார். பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமைக்கான காரணத்தை ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு மனசாட்சிக்கு அமைய குறிப்பிட முடியுமா?

பொருளாதாரப் பாதிப்பால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டம் இரத்தம் வெளிப்படும் வகையில் அமையும் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். ஜனநாயகத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தைத் தடுக்க அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அரசாங்கத்துக்கு எதிராக அமையும்,ஆகவே ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட வேண்டும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அமைய வேண்டும். - என்றார்.

# மலையக மக்களை ஒதுக்கப்பட்ட சமூகமாக பேசுகின்றமை முட்டாள் தனமான ஒன்றாகும்!

## ஜீவன் தொண்டமான் காட்டம்

மலையகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு உயர் தொழில்களில் ஈடுபட்டுவரும் நிலையில் மலையக மக்கள் மாத்திரம் ஒதுக்கப்பட்ட மக்களாகவும் வறுமைக்குட்பட்ட மக்களாகவும் பேசுகின்றமை முட்டாள் தனமான விடயமாகும் என ஜீவன் தொண்டமான தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தேசிய ஐக்கிய முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி இணைந்து கொண்டு வந்த நாட்டின் தற்போதைய நெருக்கடி தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஒதுக்கப்பட்ட சமூகம் எனும்போது அனைவரும் மலையக மக்களை மாத்திரமே சுட்டிக்காட்டி பேசிகின்றனர். நாட்டில் வேறு யாரும் ஒதுக்கப்பட்டவர்கள் இல்லையா எனக் கேட்கின்றேன். மலையக மக்கள் மாத்திரம் ஒதுக்கப்பட்ட மக்களாகவும் வறுமைக்குட்பட்ட மக்களாகவும் பேசுகின்றமை முட்டாள் தனமான விடயமாகும்.


மலையத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் தோட்டத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனையவர்கள் வெளிபிரதேசங்களில் பல்வேறு உயர் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் தொடர்ந்தும் மலையக மக்கள் ஒதுக்கப்பட்ட சமூகமாகத் தெரிவிக்கப்படுகின்றமைதான் மிகப்பெரிய கொடூரம்.

அத்துடன் இன்று எமது நாட்டில் இலவச கல்விக்கு காரணம் மலைய மக்களின் வியர்வை, இரத்தத்தை தவிர வேறு எதுவும் இல்லை. முடியுமானால் அதனை யாரேனும் இல்லை எனத் தெரிவிக்கட்டும். இதனைப் புரிந்துகொள்ளாமல் தொடர்ந்தும் ஒதுக்கப்பட்ட சமூகம் என வெட்கம் இல்லாமல் தெரிவித்து வருகின்றனர். ஆனால், மலையகத்தில் அண்மையில் இரண்டு உயிர்கள் அநியாயமாகப் பலியாக்கப்பட்டன. தோட்ட நிர்வாகத்தில் கவனவீனத்தாலேயே இந்த விபத்துக்கள் இடம்பெற்றன. அந்த மரணித்தவர்கள் தொடர்பில் கதைப்பதற்கு இன்று யாரும் இல்லை. இதனை விபத்து எனத் தெரிவிக்க முடியாது. தோட்ட நிர்வாகம் இந்த இரண்டு பேரையும் கொலை செய்திருக்கின்றது. அப்படியான கொடூரமான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

மேலும் பொருளாதார நெருக்கடி காரணமாக மலையக மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வீதம் குறைவடைந்துள்ளது என கல்வி அமைச்சர் தெரிவிக்கின்றார். பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் மலையக மாணவர்கள் முறையாகப் பாடசாலைக்கு சென்று படித்தார்களா எனன் கேட்கின்றோம். மத்திய மாகாணத்தில் மாத்திரம் 728 பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இவ்வாறான நிலையில் மாணவர்கள் எப்படி பாடசாலைக்கு சென்று படிக்க முடியும். அதேபோன்று ஏனைய மாவட்ட பாடசாலைகளில் இருக்கும் ஆங்கிலம், விஞ்ஞானம், தொழிநுட்ப கல்வி ஏனைய மலையகம் சார்ந்த மாவட்டங்களில் மாத்திரம் ஏன் இல்லை எனக் கேட்கின்றோம்.

அதனால் மலைய மக்கள் ஒதுக்கப்பட்ட சமூகம் எனத் தெரிவிக்க முடியாது. மாறாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள சமூகம் என்றே தெரிவிக்க வேண்டும். ஏனெனில் மலையகப் பாடசாலைகளில் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தினால் அந்த மாணவர்கள் நல்ல முறையில் படித்தால் வேறு தொழில்களுக்குச் சென்று விடுவார்கள். அதனால் தோட்டங்களில் வேலைசெய்ய யாரும் இருக்க மாட்டார்கள். அதனால்தான் மலையக பாடசாலைகளில் முறையான பாடங்கள் இடம்பெறுவதில்லை.

அத்துடன் இரம்பொடை புளும்பீல் தோட்டத்தில் நாங்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப்போராட்டத்தை வெற்றியுடன் நிறைவு செய்கின்றோம். அந்தத் தோட்ட தொழிலாளர்களுக்குரிய ஈ.பி.எப்., ஈ.ரி.எப். அனைத்தும் முழுமையாக செலுத்தப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாவரை நிவாரண பணம் வழங்கப்படுகின்றது. காணியும் வழங்குகின்றனர். எனவே இந்த வெற்றியை மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு சமர்ப்பணமாக வழங்குகின்றேன். - என்றார்.



# ஹம்பாந்தோட்டை துறைமுகமும் சீனாவின் ‘கடன் பொறி இராஜதந்திரமும்’

- எஸ். அன்ரனி நோர்பேட் -
(முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)




இலங்கை அரசாங்கம் அம்பாந்தோட்டையின் கரையோரத்தில் அமைந்துள்ள ‘மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தினை’ அபிவிருத்தி செய்வதற்கு நீண்டகாலமாக முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும், நிறைவேறாமல் இருந்த இத்திட்டத்தை சீனாவின் கடனுதவி கிடைக்கப் பெற்றபோது அமுலாக்கும் முயற்சியினைத் தொடங்கியது. துறைமுகத்தின் கட்டமைப்பினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னரே சென்மதி நிலுவை நெருக்கடி காரணமாக இலங்கை அதிகாரிகள் சீனக் கம்பனியுடன் அந்நியச் செலாவணியின் உட்செலுத்தலுக்குப் பதிலாகத் துறைமுகத்தைக் குத்தகைக்கு விடுவதற்கு மீண்டும் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்பினார்கள். இது சீனாவின் ‘கடன் பொறி இராஜ தந்திரம்’ எனச் சர்வதேச ரீதியாகப் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. சீனாவின் உட்கட்டுமான முதலீட்டு அணுகுமுறையின் மூலம் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தை ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் நிச்சயமாக உருமாற்றம் செய்யும் என்னும் உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. ஆனால் இலங்கையின் உள்நாட்டு அரசியல் மற்றும் பூகோள அதிகாரப் போட்டியின் காரணமாக இந்தச் சர்ச்சைக்குரிய செயற்றிட்டத்திற்கு சாயம் பூசும் முயற்சிகளே பெரிதும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் பிரதானமான கொழும்புத் துறைமுகத்துக்கு அடுத்ததாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விருத்தி செய்வதற்கான நோக்கம் இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக 2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்தது. இலங்கையின் தென் மாகாணத்தில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டைத் துறைமுகமானது ஆசிய – பசுபிக் பிராந்தியத்தை ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிராந்தியத்துடன் இணைக்கும் பிரதான கடல் பாதையில் இருந்து பத்து கடல் மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இந்திய உபகண்டத்தில் சந்தைகளை விரிவாக்குவதற்கான இலகுவான அடைகையையும் கொண்டிருப்பதுடன் இந்தியா, ஆபிரிக்கா மற்றும் வளைகுடாவுக்கான கடற் போக்குவரத்தினை மேற்கொள்ளும் போது குறைவான நேரத்தில் கடந்து செல்லும் (Transit Time) சூழல் உருவாகியது. இச் செயற்றிட்டத்தினை விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் வறுமை நிலையில் காணப்படும் தென் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தலாம் என இலங்கை அதிகாரிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

2002 யூனில் இலங்கைத் துறைமுக அதிகாரசபை



(Sri Lanka Port Authority) கனடாவைத் தளமாகக் கொண்டிருந்த கம்பனி ஒன்றுடன் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விருத்தி செய்வதற்கு அதன் பொருத்தப்பாடு பற்றிய முதனிலை ஆய்வினை மேற்கொள்வதற்கான ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டது. கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தப்பாடு பற்றிய முதனிலை ஆய்வில் போதிய தகவல்களை உள்ளடக்குவதற்குக் கம்பனி தவறிவிட்டதனால் துறைமுக அதிகாரசபை நிதியுதவி வழங்க மறுத்துவிட்டது. இதனால் பொருத்தப்பாடு பற்றிய இரண்டாவது ஆய்வினை டச்சுக் கம்பனியிடம் வழங்கி 2007 இல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டது. இவ் ஆய்வினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னரேயே சீனக் கம்பனிகளை இலங்கை அரசாங்கம் செயற்றிட்டம் தொடர்பான செயன்முறைகளில் ஈடுபடுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. 2006 ஒக்டோபரில், ஹம்பாந்தோட்டை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் (கட்டம்1) விரிவான வடிவமைப்புப் பணிகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கும் – சீனத் துறைமுகப் பொறியியல் கம்பனி மற்றும் சினோ ஹட்ரோ வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்றிட்டத்துக்குத் தேவையான தொழில்




நுட்ப உதவிகள் மற்றும் சலுகை அடிப்படையிலான நிதியை வழங்குவதற்கு சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.

2007 பெப்ரவரி – மார்ச்சில் ஜனாதிபதி ராஜபக்ஷ சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டு ஹம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம் பற்றிக் கலந்துரையாடினார். விஜயத்தின் முடிவில் இரு அரசுகளினாலும் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. துறைமுகக் கட்டுமானம், எரிபொருள் சேமிப்பு வலயம், எரிபொருள் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அபிவிருத்தி வலயம் பற்றி இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. 2007 ஒக்டோபரில் துறைமுகக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏறக்குறைய 361 மில்லியன் அமெரிக்க டொலர் (US) ஒப்பந்தமாக அது இருந்தது. செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம் பூர்த்தியடைந்த போது உண்மையான செலவு 508 மில்லியன் டொலராக அதிகரித்திருந்தது. இதற்கு சீனாவின் எக்சிம் வங்கி (Exim bank) மூலம் இரண்டு கடன்கள் வழங்கப்பட்டன.

1983 – 2009 கால உள்நாட்டு யுத்தத்தில் நாடு சிக்குண்டு இருந்த வேளையில் தான் சீனாவின் துறைமுகப் பொறியியல் கம்பனி (CHEC), 1998 இல் இலங்கையில் கால் பதித்தது. அடுத்த பத்து வருடத்துக்குள் தேசிய பு5 அதிவேகப் பாதை உட்படப் பல்வேறு உள்நாட்டுச் செயற்றிட்டங்கள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டன. 2004 இல் இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான சுனாமியின் தாக்கத்தின் பின்னர் தனது கட்டுமானக் கருவிகளைப் பயன்படுத்தி மீட்புப் பணிகளிலும் இக்கம்பனி ஈடுபட்டது. அத்துடன், மூன்று மீன்பிடித் துறைமுகங்களைச் சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டமைப்பின் மூலம் மீளுருவாக்கம் செய்தது. 2007 இல் கம்பனியானது, ஹம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டத்தின் பொருளாதார வாய்ப்புக்களை மதிப்பிடுதல், புவிச்சரிதவியல் தொடர்பான எதிர்கால வாய்ப்புக்கள் மற்றும் சூழலியல் தாக்க மதிப்பீடு ஆகியவற்றினை உள்ளடக்கிய பொருத்தப்பாடு தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளவும் உதவியது. ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் முதலாவது கட்டம் 2012 இல் பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் 2010 டிசெம்பரில் CHEC கம்பனியினால் இரண்டாம் கட்டத்திற்குரிய பொறியியல், கொள்வனவு ஏற்பாடுகள் மற்றும் கட்டுமானம் பற்றிய ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இரண்டாம் கட்டத்திற்கான மொத்தச் செலவீடு பற்றிய ஆரம்ப மதிப்பீடு 808 மில்லியன் டொலராக (US) இருந்தாலும் பின்னர் அது 885 மில்லியன் டொலராக உயர்வடைந்தது.

2014 செப்ரெம்பரில் சீனத் துறைமுகப் பொறியியல் கம்பனியுடன் (China Harbor Engineering Company - CHEC) சேர்ந்து வேறு மூன்று கம்பனிகள் கூட்டு முயற்சியொன்றினை உருவாக்கியதுடன் இலங்கைத் துறைமுக அதிகார சபையுடன் (SLPA) ‘விநியோகம், தொழிற்பாடு, பரிமாற்றம்’ (Supply, Operate, and Transfer - SOT) சம்பந்தமான குத்தகை உடன்படிக்கை (Lease Agreemen) ஒன்றினையும் மேற்கொண்டது. இந்தக் கூட்டுமுயற்சியில் (1) சீன வணிக வரையறுக்கப்பட்ட உரிமைக் கம்பனி, (2) சர்வதேச முதலீட்டின் ஓர் அங்கமான சீன வணிகக் குழு (CMG), (3) ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்ட சீன அரசு நிறுவனம் ஆகியன ஈடுபட்டன. சீன வணிகக் குழுவின் துணைக் கம்பனியான சீன வணிகத் துறைமுக வரையறுக்கப்பட்ட உரிமைக் கம்பனி (CMPort) என்பது 2011 இல் இலங்கையின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. விநியோகம், தொழிற்பாடு, பரிமாற்றம் சம்பந்தமான குத்தகை ஒப்பந்தம் 35 வருட சலுகைக் காலத்தைக் கொண்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் சீனாவிற்கும் இடையிலான கூட்டு முயற்சி மூலம் 601 மில்லியன் டொலர் (US) முதலீடு இடம் பெற்றதுடன் அதில் 64.98 வீதம் சீனாவின் பங்காக இருந்தது. இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவும், சீன அதிபரும் கையொப்பமிட்டனர்.

இக்காலத்தில் இலங்கையின் அரசியல் சூழல் மாற்றமடையத் தொடங்கியது. 2015 ஜனவரியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாகப் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் சீன எக்ஸ்சிம் வங்கியிடம் ஹம்பாந்தோட்டைச் செயற்றிட்டத்துக்காகப் பெற்ற கடன்களை மறுசீரமைக்குமாறு கோரியதுடன் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட SOT உடன்படிக்கை சட்டரீதியான அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை எனவும் குற்றம் சாட்டியது. இலங்கையின் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் 2017 ஆம் ஆண்டு அறிக்கையின்படி இவ் உடன்படிக்கையில் நிபந்தனைகள் எதுவும் குறிப்பிடப்படாததினால் சட்டரீதியாக அது செல்




லுபடியற்றதாகி விட்டது. அரசியல் குழப்பநிலை காரணமாக 2016 இல் புதிய அரசாங்கம் சீன அரசாங்கத்துடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கு விரும்பியதுடன் அரச – தனியார் பங்குடைமையின் கீழ் ஹம்பாத்தோட்டைத் துறைமுகத்தின் தொழிற்பாட்டினை முன்னெடுக்கும் சாத்தியம் பற்றியும் ஆய்வு செய்தது.

2015 இன் ஆரம்பத்திலிருந்து இலங்கை சென்மதி நிலுவைப் (Balance of Payments) பிரச்சினையை எதிர்கொள்ளத் தொடங்கியது. சக்தி எரிபொருள் சாராத இறக்குமதிகளின் அதிகரிப்பு, எதிர்க்கணிய ஏற்றுமதி வளர்ச்சி, வெளிநாடுகளிலிருந்து வரும் பண அனுப்புதல்களில் அதிகரிப்பின்மை, அரசாங்கப் பிணைகளிலிருந்து வெளிநாடுகளின் வெளியேற்றம், நேரடி அந்நிய முதலீடுகளின் குறைந்த நிலையிலான உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிவாரியான நிதியீட்ட முதலீடுகளின் அமுலாக்கத்தில் வேகமின்மை ஆகியவை காரணமாக இலங்கை ஓர் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஹம்பாந்தோட்டை துறைமுகமும் .....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

2019 மற்றும் 2023 க்கு இடையில் முதிர்ச்சியடையும் 5.7 பில்லியன் டொலர்கள் சர்வதேச அரசிறைமை முறிகள் (Sovereign Bonds) உள்ளிட்ட வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாத சிக்கலானதொரு சூழலுக்குள் இலங்கை தத்தளிக்கத் தொடங்கியது.

இதனால், அவசரகால நிதியைப் பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) செல்லவேண்டிய நிலைமை உருவாகியது. இச் சூழ்நிலையில் கொடுப்பனவைத் தாமதிப்பதற்கு அல்லது மீள் ஒழுங்குபடுத்துவதற்கு சீனத் தலைமைத்துவத்திடம் பிரதமர் மற்றும் துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஆகியோரினால் விடுக்கப்பட்ட கோரிக்கை சீனாவினால் நிராகரிக்கப்பட்டது. சீன அரசாங்கம், இதற்குப் பதிலாக இலங்கைக்கு முதலீட்டாளர் ஒருவரை இனங்காணுவதற்கு உதவி செய்வதாகக் கூறியது. சூழ்நிலையின் அவசரநிலைமை காரணமாக உலக ரீதியாக அல்லது சீனக் கம்பனிகளிடமிருந்து பிரேரணைகளுக்கான அழைப்பு விடுக்கப்படாமல் கொழும்புத் துறைமுகத்தினூடாகச் சீன அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட சீனக் கம்பனிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது.

இந்நிலையில், 2016 ஒக்டோபரில் இலங்கை அரசாங்கம் 2014 இல் குத்தகை ஒப்பந்தத்தில் பங்குதாரராக இருந்த சீன வணிகக் குழுவுடன் (CMG) மீண்டும் ஒப்பந்தம் ஒன்றுக்குச் செல்லத் தீர்மானித்தது. திருத்தியமைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் துறைமுகத்தில் 80 வீதமான பங்குகள் சில கம்பனிகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டன. இலங்கைக்கு இது பெரும் பாதிப்பாக அமையும் என்ற வாதிப் பிரதிவாதங்கள் இடம்பெற்றாலும் 2017 ஜூலை வரை இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை. ளீனிஊணலிஷமி கம்பனியின் பங்குச் சந்தை தொடர்பான தகவலின்படி, இரண்டு கம்பனிகள் உருவாக்கப்பட்டன. அவை: (1) ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகக் குழு (HIPG), (2) ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் (HIPS). இவை ஒவ்வொன்றுக்கும் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகள் ஆகியவற்றை விருத்தி செய்யவும், கையாளவும், நிர்வகிப்பதற்குமான முழு உரிமையும் வழங்கப்பட்டது. CMPort கம்பனியானது 1.12 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும். இதில் HIPG கம்பனிக்கு 974 மில்லியன் டொலர்களும் (85 வீதமான பங்குகள்), HIPS கம்பனிக்கு 146 மில்லியன் டொலர்களும் (58 வீதமான பங்குகள்) இலங்கை துறைமுக அதிகார சபை (Sri Lanka Port Authority) மிகுதியான 15 வீதம் மற்றும் 42 வீதமான பங்குகளையும் கொண்டிருக்கும். செயற்றிட்டத்தின் சலுகைக் காலம் 99 ஆண்டுகளாகக் காணப்படும்.

சீனக் கம்பனியிடமிருந்து பெற்ற 1.12 பில்லியன் டொலர் முதலீட்டு நிதியமானது, சீனாவிடமிருந்து பெற்ற படுகடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பதிலாக நாளாந்த அரசாங்க செலவீட்டுக்கே பயன்படுத்தப்பட்டது. வாங்கிய கடன் திருப்பிச் செலுத்தப்படாமல் இருந்தது. துறைமுகத்துக்காகப் பெறப்பட்ட படுகடனை விட சர்வதேச அரசிறமை முறிகள் (Sovereign Bonds) தொடர்பில் அவற்றினை உடனடியாக மீளச் செலுத்தவேண்டிய அழுத்தம் உருவாகியது. ஹம்பாந்தோட்டையில் CMPort கம்பனியானது தனது தாய் கம்பனியின் (CMG) 'துறைமுகம் – பூங்கா – நகரம்' என்னும் மாதிரியை அமுலாக்கும் திட்டத்தைக் கொண்டிருந்தது. சீனாவின் வணிகக் குழுமம் (China Merchants Group - GMG)) என்பது சீனாவின் பல துறைமுக நகரங்களில் இந்த மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பல திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்கிய அனுபவத்தைக் கொண்டது. இக்கம்பனியினால் அறிமுகம் செய்யப்படும் மாதிரியில் கைத்தொழில் பூங்காக்கள் மற்றும் நகராக்கச் செயற்றிட்டங்களுடன் ஒன்றிணைந்த துறைமுக அபிவிருத்தி என்பன உள்ளடங்கியிருந்தது. 2016 ஓகஸ்டில் கம்பனியின் 'ஷென்சென்' தளத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொண்ட போது இம்மாதிரி பற்றி அவருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

கம்பனியினால் பிரேரிக்கப்பட்டுள்ள கைத்தொழில் வலயங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு 15,000 ஏக்கர் நிலப் பகுதியை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்குத் தனியான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அபிவிருத்தி நோக்கில் விவசாய நிலங்களை இழப்பது தொடர்பாக உள்ளூரில் பல எதிர்ப்புக்கள் கிளம்பின. 2017 ஜனவரியில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குச் சொந்தமான 120 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள கைத்தொழில் வலயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவரினால் திறந்து வைக்கப்பட்டது. சீனத் தூதுவர் குறிப்பிடும் போது இவ் வலயமானது சீனாவிலிருந்து 5 பில்லியன் (US) டொலர் முதலீட்டைக் கொண்டு வருவதுடன் அடுத்து வரும் 2 – 5 வருடங்களில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் என்றார். ஆனால் 2021 ஆம் ஆண்டுவரையும் இது நடைமுறைச் சாத்தியமாக அமையவில்லை. 2017 நவம்பரில் இலங்கை – சீன தளபாட விநியோகம் மற்றும் கைத்தொழில் வலயத்திற்கான அலுவலகம் ஹம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது.



இதற்கான வலயம் 50 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் திட்டமிடப்பட்டது. சீன வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் குறிப்பிடும் போது 'ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் பற்றிய சலுகை ஒப்பந்தத்தின் மூலம் நட்புறவான கலந்தாலோசனைகள் மூலம் பரஸ்பர நன்மைகளைச் சம அந்தஸ்துடன் தன்னார்வ அடிப்படையில் இலங்கை பெற்றுக் கொள்ள முடியும்' என்றார். அத்துடன் ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான எந்தவொரு மறு பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை எனவும் சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகக் கட்டமைப்பினால் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. 2017 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பின்னர் தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டின. ஏறக்குறைய 430 தொழிலாளர்கள் தமது வேலையை இழந்த போது உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்றது. இடம்பெயர்த்தல் மற்றும் நிலப்பிணக்குகள் காரணமாக மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்குக் குறைந்த அளவான நஷ்ட ஈடு வழங்கப்பட்டதுடன் அப்பகுதிகள் குறைந்தளவான அடிப்படை வசதிகளையும் கொண்டிருந்தன. செயற்றிட்டம் மற்றும் அதற்கான உட்கட்டுமானங்கள் சூழலியல் உணர்திறன்மிக்க பகுதிகளில் – விசேட மாக யானைகளின்வாழிடங்கள்மற்றும்ராம்சார்ஈரநிலங்களுக்கு அருகாமையில்அமைந்திருந்தன. இத்தகைய உள்ளார்ந்த சூழலியல் பாதிப்புக்களைச் 'சூழல் தாக்க மதிப்பீடுகள்' போது மான அளவு கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது என அரசுசாரா நிறுவனங்கள் குற்றம் சாட்டின.

சீனக் கம்பனிக்கான குத்தகை, அதிகளவான கடன் தேவை காரணமாகச் செயற்றிட்டமானது மிகுந்த சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன் சீனா வின் 'கடன்பொறி இராஜதந்திரத்துக்கு' (debt - trap diplomacy) ஓர் உதாரணமாகக் காணப்பட்டது. 2016 – 2017 காலத்தில் சீனக் கம்பனியுடன் முதலீட்டு ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருந்த பொழுது கைத்தொழில் வலயம் ஒன்றை விருத்தி செய்வதற்காக சீனாவுக்கு 6700 ஹெக்டேயர் நிலப் பகுதியைக் குத்தகைக்கு விடும் பிரேரணைக்கு எதிராகப் பல போராட்டங்கள் தோற்றம் பெற்றன. துறைமுகத்திற்கு அருகாக பேரகம (Beragama) கிராமத்தில் 6700 ஹெக்டேயர் நிலப் பகுதியைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக உள்ளூர் மக்கள் எதிர்ப்பைக் காட்டுவதில் அக்கறை கொண்டிருந்தனர். ஏனெனில் இப்பகுதியானது வளமான நிலத்தைக் கொண் டிருந்தது. இச் செழிப்பான நிலத்தில் விவசாயம் செய்வ தற்கென காலனித்துவக் காலத்திலிருந்தே மக்கள் இங்கு குடியேறியிருந்தனர். புதிய அபிவிருத்தித் திட்டத்தின் காரணமாக இந்நிலங்களிலிருந்து தாம் வெளியேற வேண்டியேற்படுமோ என உள்ளூர் மக்கள் பயந்தனர். உள்ளூர் மக்களின் கவலையைக் கருத்தில் கொண்டு தற்போதைய விவசாயப் பகுதிகளைச் சுவீகரிப்பதற்குப் பதிலாகத் துறைமுகத்தை விருத்தி செய்வது பற்றிக் கவனம் செலுத்த வேண்டுமென சீனத் தூதுவருக்கு முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ அறிவுறுத்தியிருந்தார்.

பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களால் வன்முறை மூலம் அடக்கப்பட்டது. 2017 ஜனவரியில் ஓர் ஆர்ப்பாட்டத்தின் போது கிராம மக்களுக்கும் அரசாங்க ஆதரவாளர்களுக்கும் இடையிலான மோதல்களினால் 21 பேர் காயமடைந்தனர். பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தி மோதல்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஹம்பாந்தோட்டைக் கைத்தொழில் வலயத்தின் திறப்பு விழாவில் இலங்கைக்கான சீனத் தூதுவரும் இலங்கைப் பிரதமரும் பங்கு பற்றிய போது இவ் ஆர்ப்பாட்டங்கள் யாவும் அரசியல் ரீதியாக எதிர்க்கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டவையென அரசாங்கம் குறிப்பிட்டது. அம்பாந் தோட்டை துறைமுகத்தை முதலிடத்தில் இருக்கும் வகையில் கட்டியெழுப்புவதற்கு முன்னைய ஜனாதிபதி ராஜபக்ஷ முயன்றாலும் கைத்தொ ழில் வலயத்துக்கென நிலத்தினைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தன. ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக சீனாவின் வெளிவிவகாரப் பேச்சாளர் குறிப்பிடும்போது 'அண்மையில் இடம்பெற்ற சிறியளவான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டத்தின் கொள்கைகள் பற்றி உள்ளூர் மக்கள் தவறாக விளங்கிக் கொண்டதன் விளைவே' என்றார்.

துறைமுகம் மற்றும் அதனுடன் இணைந்து காணப்படும் அபிவிருத்திகளின் சூழலியல் தாங்கங்கள் பற்றிய அக்கறைகள் அறிக்கைகளில் வெளிவந்தன. உள்ளூர் அரசுசாரா நிறுவனங்களின்படி இச் செயற்றிட்டமானது புகலிடம் தேடிவரும் புலம்பெயர் பறவைகளுக்கான முக்கிய ஈரநிலமாக விளங்கும் 'கராகன் லெவாவ' கடனீரேரிக்கு (Karagan Levava Lagoon) அழிவை ஏற்படுத்தும். அபிவிருத்திச் செயன்முறையின் காரணமாக ஏற்படும் அகழ்வுகளினால் பெரிதும் சிதைவிற்கு உட்படும். துறைமுகத்திலிருந்து 40 கிலோ மீற்றருக்குள் அமைந்துள்ள புந்தல தேசிய பூங்கா (Bundala National Park) நாட்டின் முதலாவது ராம்சார் சமவாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட சர்வதேச முக்கியத்துவம் பெற்ற பகுதியாகும். அது மாத்திரமன்றி, யானைகளின் நடைபாதைகளையும் அருகாமையில் கொண்டுள்ளது. உலகின் 'வெறுமையான விமான நிலையம்' (Emptiest Airport) என அதிகளவில் புகழ்பெற்ற 'மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையமானது உணர்திறன் மிக்க வனவிலங்குப் பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் பெருந்தெருவின் மூலம் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. செயற்றிட்டப் பகுதியில் 400 க்கு மேற்பட்ட யானைகளினால் பயன்படுத்தப்படும் 'இடைவழிப் பாதைகள்' (Corridor) உள்ளன. உள்ளூர் யானைகளின் மொத்தக் குடியில் (Elephant population) 15 வீதம் – 20 வீதம் இந்தச் செயற்றிட்டப் பகுதியிலேயே வாழ்கின்றன. துறைமுகம் பற்றி மேற்கொள்ளப்பட்ட சூழலியல் தாக்க மதிப்பீட்டில் வனவிலங்குகள் மீது செயற்றிட்டத்தின் உள்ளார்ந்த தாக்கங்கள் பற்றிப் போதியளவில் குறிப்பிடப்படவில்லை என உள்ளூர் சூழலியல் குழுவான 'சூழலியல் நீதிக்கான மையம்' தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் CMPort கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பின்னர் 2017 இல் சர்வதேச பத்திரிகைகளின் பரந்தளவான கவனத்தை ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் பெற்றுக் கொண்டது. சீனாவின் 'கடன்பொறி இராஜதந்திரம்' என்பதற்கு இது ஓர் உதாரணம் எனப் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். நிலைபேண் தன்மையற்ற கடன்களை (Unsustainable Loans) மற்ற நாடுகளுக்கு வழங்கி, பின்னர் அந்நாடுகள் கடனை மீளச்செலுத்த முடியாத நிலையில் தத்தளிக்கும் பொழுது அந்நாடுகளின் மூலோபாயச் சொத்துக்களைக் கையகப்படுத்தும் நோக்கங்களைக் கொண்ட நடைமுறை இதுவெனக் குறிப்பிட்டனர். சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் அதுபோன்று சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டியில் (Geo political competition) இத்தகைய சாட்டுதல்கள் சிக்கிக் கொண்டுவிட்டன. 2018 இல் ஐக்கிய அமெரிக்கா வின் உப ஜனாதிபதியாக இருந்த 'மைக்பென்ஸ்' என்பவர் தனது உரையில் 'சீனா தனது செல்வாக்கினை விரிவு படுத்துவதற்குப் படுகடன் இராஜதந்திரத்தைப் பயன்படுத்துகின்றது' எனக் குற்றம் சாட்டினார். சீனாவும் இலங்கையும் மீண்டும் மீண்டும் மறுப்புத் தெரிவித்தாலும் துறைமுகத்தினை இராணுவத் தளமாக மாற்றும் சீனாவின் எண்ணம் பற்றிய எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது.

நாட்டினால் கவனம் செலுத்த வேண்டிய வேறு நிதிக் கடப்பாடுகளுடன் ஒப்பிடும் போது துறைமுகக் குத்தகைக்கான சீன கடன் பணிக்கிரயம் என்பது குறைவாகவே இருந்தது. 2015 இல் இலங்கைத் துறைமுக அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில்பார்க்கும்போதுசீனாவின்'எக்சிம்வங்கியிடமிருந்து மொத்தமாக 1.26 பில்லியன் டொலர்கள் ஐந்து தடவையிலான கடன்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 70 வீதமானவை முன்னுரிமை அடிப்படையில் 2 வீத வட்டி வீதத்தில் பெறப்பட்டுள்ளன.

2016 இன் முடிவில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துடன் தொடர்பான கடன் நிலுவை 1.098 பில்லியன் டொலர்கள் அல்லது இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனின் 4% ஆகும். சீன அரசாங்கத்துக்கும் சீன எக்ஸ்சிம் வங்கிக்கும் செலுத்த வேண்டிய கடன் நிலுவை என்பது இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் நிலுவையில் 9.2% ஆக இருந்தது. 2007 மற்றும் 2018 க்கு இடையில் வெளியிடப்பட்ட நாட்டின் 15.3 பில்லியன் டொலர் சர்வதேச அரசிறை முறிகள் (International Sovereign Bonds) உயர் வட்டி வீதங்களில் குறைவான முதிர்சிக் காலத்தைக் கொண்டதாக இருப்பதினால், சீனாவிடம் இருந்து பெற்ற படுகடன்களை விட இதுவே இலங்கைக்குப் பாரிய நிதிச்சுமையாக இருந்தது. 2019 இல் அரசிறை முறிகளுக்கான கடன் பணிக் கிரயத்தின் செலவுகள்(debt-servicing costs) என்பது இலங்கையின் மொத்தக் கடன் பணிக்கிரயத்தில் 40% க்கு மேலாகக் காணப்பட்டது. துறைமுகத்திற்கான குத்தகை பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போது நாட்டின் பிரதான கடன் வழங்குனராக சீனா இருக்கவில்லை. மாறாக, யப்பான், உலக வங்கி மற்றும் ஆசிய அபிபிருத்தி வங்கி என்பனவே இலங்கையின் முக்கிய கடன் வழங்குனராக இருந்தன.

இலங்கை அரசாங்கம் இச் செயற்றிட்டத்தினை முன்நகர்த்திச் செல்லும் போது அது உள்ளூர் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டும் ஓர் இயந்திரமாக விளங்கும் என்ற ஆரம்பநிலை எதிர்பார்ப்பு இன்று வரை நிதர்சனமாகவில்லை. 2016 இல் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த 4405 கப்பல்களுடன் ஒப்பிடும் போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு 287 கப்பல்களே வருகை தந்திருந்தன. 2017 மற்றும் 2018 இல் இருந்த எண்ணிக்கை முறையே 230 மற்றும் 270 ஆக இருந்தது. 2016 இல் துறைமுகத்தினால் ஏற்பட்ட திரட்டிய இழப்பு ((losses) 300 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் புவிசார் அரசியலில் முக்கியமான வகிபங்கினைக் கொண்டதாக இத்துறைமுகம் மாற்றமடைந்து வருகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தமிழீழ அரசு அமைந்தது; ஆனால் அமையவில்லை!



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 176

09 நவம்பர் 2022 (நேற்றைய) பதிவிற்காக, கடைசி வரியில் 'இந்த இணக்கங்களிலோ, போராட்டத்திலோ யதார்த்தமான தீர்வை தமிழ் மக்கள் கண்டார்களில்லை. அவற்றிலிருந்து பெறப்பட்ட அறிவையும் போக்குகளையும் சிறிது நோக்கலாம்' என எழுதி இருந்தேன். ஆனாலும் அச்சுப் பிழை (printers devil) 'நக்கத்திலேயே' என்று பதிந்து விட்டது. நல்ல காலம் 'நரகத்திலே' என்று குறிப்பிடவில்லை.

'சிங்களம் மட்டும்' என்ற சட்டம் பேரினவாதத்தின் முதற்படியாக கொண்டு வரப்படும் காலம் வரை, மக்கள் பெருமளவு இணக்கமாக இருந்தார்கள். அதன் பின் படிப்படியாக அவை குறைந்து, பௌத்தமும் சேர சிங்கள - பௌத்த பேராண்மையாக அது விஸ்வரூபம் எடுத்து தலை விரித்தாடுகின்றது.

மறவன் புலவு சச்சிதானந்தனுக்கு உணர்த்தப்பட்ட இணக்கமும் அவர் புரிந்து கொண்டதும் ஒருவகை. நாடாளுமன்ற அங்கத்தினர் கதிரவேற்பிள்ளையும் அவரது சகோதரர் அம்பலவாணரும் அறிந்து கொண்டது இன்னொரு வகை.

அதேபோல் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சிங்கள பேராண்மையில் நடப்புக்களில் அனுபவப்பட்டு இணக்கத்தினோடு வாழலாமா என்பது தொடர்பில் தத்தமது அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பார்கள். அந்த அபிப்பிராயங்களின் ஒன்று கூடலும், ஒட்டுமொத்தமான நிலைப்பாடுமே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும், அதனை அடுத்து வந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அமோகமான ஆதரவையும் அள்ளித் தந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் 1977 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில், தேர்தலின் பின் தேசிய அமைப்பை அமைத்து, அவர்கள் தமிழ் மக்களுக்கான அரசமைப்பை உருவாக்குவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.




'லைக்கா' மொபைல் சுபாஸ்கரன்



தென்னிலங்கைக் கலவரம்

ஆகவே, தமிழ் மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமையை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம் உபயோகப்படுத்தி வெளிப்படுத்திக் கொண்டார்கள். 1977 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு நடத்திய பொது தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மக்களினால் பெருவாரியான ஆதரவு பெற்றது. அதனை சர்வஜனவாக்கின் அதிகாரமாகக் (Plebiscite) கருதலாம். ஆகவே தமிழ் மக்கள் வெளிப்படுத்திக் கொண்ட சுய நிர்ணய உரிமையின் மூலம் 'சட்டரீதியாக'த் தமிழீழம் அமைந்தது. அது அரசாங்கமாக ஸ்ரீலங்காவில் நிறுவப்பட்டு இயங்குவதற்கு முயன்றிக்க வேண்டும். அன்றில், இன்னும் ஒரு நாட்டின் ஆதரவோடு அங்கு அமைக்கப்பட்டு அங்கு இயங்கி வர வேண்டும். இரண்டுமே நடைபெறாதமையால் அது அரசியல் சட்டங்களில் இருக்கக்கூடிய புனைவாக கருதப்படும். – 'இருக்கிறது ஆனால் இல்லை' என்பது போல.



ஜே.ஆர்.

சட்டங்களின் இந்தப் புனைவுகளினால் தமிழீழம் உருவாகுவதற்கான பிரச்சாரங்கள் எழும் எனக் கணித்த பேரினவாதம், அதனை வன்முறையால் தாக்கியதால், 1977 ஆண்டு கலவரம் நடந்தது. சர்வதேச விழிப்பு ஏற்பட்டதால் அவற்றின் கண்டதுடைப்புகளுக்காக ஜே.ஆர்., சன்சோனி ஆணைக்குழுவை அமைத்து விசாரணை மேற்கொண்டார்.

சிங்கள மக்களிடையே இணக்கமாக வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் மக்களின் மேல் ஏவப்பட்ட காடைத்தனங்களில் எத்தனையோ சம்பவங்களில் பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டிருந்தார்கள் எனவும், பாதுகாப்பு படையினரோ பொலிஸாரோ நேரடியாக ஈடுபடாவிட்டாலும் நடந்த சம்பவங்களைக் கட்டுப்படுத்தாது கடமையிலிருந்து தவறினார்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களுடன் அந்தந்த அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைகளுக்காக அரசுக்கு ஆணைக் குழு விடயத்தைப் பாரப்படுத்தியது.

நடந்தது என்ன?

மிகத் தெளிவாக காடைத்தனத்தில் ஈடுபட்டார்கள், கடமைகளில் தவறினார்கள் எனப் பாரப்படுத்தப்பட்ட எத்தனையோ அதிகாரிகள் பதவி உயர்த்தப்பட்டார்கள். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள் நீதிக்கும் நியாயத்திற்கும் மாறானது எனக் கூக்குரல்கள் எழுப்பப்பட்டன. அரசாங்கமோ அவை பற்றி எதுவித கிலாசமும் இன்றி, அந்த அதிகாரிகள், அதில் ஈடுபட்டதற்கான சாட்சியமளிக்கப்பட்ட மந்திரிகள், அரசாங்க அதிகாரிகள் யாபேரையும் பாதுகாக்கும் முகமாக Indemnity act 1982 ஐ ஆக்கியது. இந்தச் சட்டத்தின் ஆக்கம் இந்த கலவரங்களின் பின்னால் இருந்த அரசின் திட்டங்களை எடுத்துக் காட்டியது.

இத்தகைய அரச பாதுகாப்புக்களும் பின்னணிகளுமே 1983 ஆண்டு கலவரங்களை உருவாக்கின. பின்னர் தொடர்ந்த அட்டூழியங்கள் முள்ளிவாய்க்காலில் நடந்தவை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளின் ஏக்கங்கள் எனத் தொடர்கின்றன.

இணக்கத்தில் ஏற்படக்கூடிய தீர்வில், இவற்றுக்கு நீதியோ நியாயமோ எந்த அளவில் ஏற்படுத்தப்படும்? ஸ்ரீலங்கா அவற்றுக்கு இணங்குமா என்று இதுவரை பட்டதிலிருந்தும் அறிந்து கொண்டு விட்டதாகத் தெரியவில்லை. சர்வதேச அழுத்தங்களால், ஜனாதிபதி மஹிந்தர் கூட 'உண்மை மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்கத்திற்கான விசாரணைக் குழு'வை அமைத்தாராயினும், முடிவில் 1977 விசாரணை போல் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் யாபேரும் அரசின் உயர்ந்த பதவிகளிலோ, அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் பதவிகளிலோ உட்கார்ந்து 13 வருடங்களாக காலத்தைக் கழிக்கிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை பற்றிப் பேசவில்லை. நல்லாட்சி காலத்தில் பிரதமராக இருந்த ரணில் அவர்கள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்றார். அப்பொழுது நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி விசாரணைக்காக ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, அவர்களது முன்னோடித் தகவல்களில் அவர்கள் இறந்திருக்கலாம் அல்லது ஸ்ரீலங்காவில் இல்லாமல் இருக்கலாம் என்றார். இன்றைய நீதி அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷ எவரும் உயிருடன் இல்லை என்பது தெளிவாகத் தெரிவதால்தான் நிதி உதவி தரப் போகிறோம் என்று அதனை முடிவுக்குக் கொண்டு வரக் கேட்கிறார். அந்தத் தொகை இரண்டு லட்சம் ரூபாவாம்.



ஆணையாளர் சன்சோனி

அரசியல் தலைவர்கள் ஆண்டாண்டுகளாக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கோரி நாடாளுமன்றத்திலும் வெளியேயும் பேசி, நல்லாட்சியிலும் பங்கு பற்றி, எதிலும் முற்றிலுமாகச் சாதிக்க முடியவில்லை. விடுவிக்கப்படாமல் எத்தனை பேர், எவ்வளவு வருடங்கள் குற்றத்திற்கு மேற்பட்ட தண்டனை காலத்திற்கும் சிறையில் இருக்கும் தகவல்கள் தெரியாமல் இருந்தவர்களில், இப்பொழுது ஜனாதிபதி ரணிலை லண்டனில் 'லைக்கா மொபைல்' நிறுவுனர் சுபாஸ்கரன் சந்தித்தபின் எட்டு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றும், அவர்களுக்கு சுபாஸ்கரன் தலா 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார் என்றும், அப்படியாக மிகுதியாக இருக்கக்கூடிய 81 பேரை விடுவிக்கவும், அவர்களுக்கும் தலா 28 லட்சம் ரூபா தர அவர் முன்வந்துள்ளார் என்றும் 'அதிர்வு' மின்னஞ்சல் ஊடகம் தெரிவித்துள்ளது. பெரும் தொழிலதிபர், வாணிகம் தெரிந்தவர் என்று பேசப்பட்ட அவர், பெரிய அரசியல் காயை நகர்த்தி உள்ளார் என அந்தச் செய்தி சொல்கிறது.

அப்படியானால் இணக்கங்களில் அரசியல் தீர்வுகள் யார் கைகளில் என்ற பட்டறிவுகள் தெரிகிறதா?

(வளரும்....)

# நாட்டில் அரசாங்கத்தின் அடக்குமுறைகள் மக்கள் போராட்டத்தைத் தீவிரமாக்குமாம்!

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டல் ஆலோசனைக்கு அமைய அரசாங்கம் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் அடக்குமுறை மக்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்.

அது அரசாங்கத்துக்கும், பொருளாதாரத்துக்கும் தாக்கம் செலுத்தும். அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது சந்தேகத்திற்குரியது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எரிபொருள் விலை குறைவடைந்துள்ளதால் பணவீக்கம் சற்று குறைவடைந்துள்ளது. பொருளாதார பாதிப்பால் நடுத்தர மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை வழமைக்கு மாறாகக் குறைத்துக் கொண்டுள்ளார்கள். கடந்த ஒக்ரோபர் மாதம் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 5 ஆயிரத்து 516 மெற்றிக் தொன் எரிபொருள் மாத்திரமே நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் கொள்வனவு நூற்றுக்கு ஐம்பது சதவீதமளவில் குறைவடைந்துள்ளது. இது பொருளாதார பாதிப்பை மேலும் தீவிரப்படுத்தும். 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மாத்திரம் எரிபொருள் இறக்குமதிக்கு மாத்திரம் 3 ஆயிரத்து 570 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், வருமானம் 9 ஆயிரத்து 560 கோடி ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவ்வாறாயின் அரசாங்கத்துக்கு இக்காலப்பகுதியில் 6 ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் 5 ஆயிரத்து 130 கோடி ரூபா கடன் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எரிபொருளை அதிக விலைக்கு விற்கும் போது அது சகல துறைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எரிபொருள் விலை அதிகரிப்பு மின்சார கட்டணம் உயர்விற்கு முக்கிய காரணியாகும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக வரி சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு 890 கோடி டொலர் ஆகக் காணப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் எதிர்வரும் ஆண்டு 660 கோடி டொலர் ஆக வீழ்ச்சியடையும் என சர்வதேச பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

2025 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 120 கோடி டொலர் பொருளாதாரத்தை எதிர்பார்த்த நாடு தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு சிறந்த நிலையான திட்டங்களை தற்போது வகுக்காவிடின் அது எதிர்காலத்துக்கும் பன்ம டங்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டில் ஏழ்மை, தொழிலின்மை, வறுமை உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் ஆலோசனைக்கு அமைய அரசாங்கம் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். மந்தபோசனை தொடர்பில் கருத்து வெளியிட்ட வைத்திய நிபுணருக்கு எதிரான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. ஆனால் இலங்கையில் மந்த போசனை தீவிரமடைந்துள்ளதாக சர்வதேச நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் அறிக்கை வெளியிட்டுள்ளன.

சர்வதேசத்தின் ஆலோசனைக்கு அமைய ஊழல் இல்லாத அரச நிர்வாகக் கட்டமைப்பை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். எரிபொருள் இறக்குமதி தொடர்பில் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆனால் நிலக்கரி, எரிவாயு கொள்வனவில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாகக் கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் பொறுப்பற்ற தன்மையில் செயற்பட்டால் நாட்டு மக்கள் எந்த விடயத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள். மக்கள் போராட்டம் தீவிரமடையும், அது அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல பொருளாதாரத்துக்கும் தாக்கம் செலுத்தும்.

2023 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் முதல் மூன்று மாத காலத்துக்குள் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை எட்டி, நிறைவேற்று குழுவுடன் தொடர்பு கொள்ளும் நிலைக்கு அரசாங்கம் செல்லும் என நம்பிக்கை கொள்ள முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தோல்வி அடையும் பட்சத்தில் அடுத்தக் கட்ட திட்டத்தை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் உருவாக்க வேண்டும். – என்றார்.

# அத்தியாவசிய பொருள்களை சாதாரண விலையில் விநியோகிக்க நடவடிக்கை!

## நளின் பெர்னாண்டோ உத்தரவாதம்



பண்டிகைக் காலங்களில் விலை அதிகரிப்பின்றி அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடில்லாமல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அதனைக் கடைப்பிடிப்பது தொடர்பில் தேசிய உற்பத்தியாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடளுமன்றத்தில், தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி இணைந்துகொண்டு வந்த நாட்டின் தற்போதைய நெருக்கடி தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பண்டிகைக் காலங்களில் விலை அதிகரிப்பின்றி அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடில்லாமல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அதனைக் கடைப்பிடிப்பது தொடர்பில் தேசிய உற்பத்தியாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதத்துடன் ஒப்பிடுகையில் அத்தியாவசிய பொருள்கள் பலவற்றின் விலைகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இறக்குமதி செய்யும் 10 உணவுப் பொருள்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டமை மக்களுக்கு சிறந்த நிவாரணமாக அமைந்துள்ளது. அதில் அரிசி, கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட முக்கிய அத்தியாவசிய உணவுப் பொருள்களும் உள்ளடங்கியுள்ளன.

அத்துடன் எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தமையே எமது டொலர் நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகள் 70 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை எமக்கு நன்கொடையாக வழங்கியுள்ளன.

மேலும் அரிசி, முட்டை ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் அரிசி குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அடுத்த அறுவடையின் பின்னர் அரிசியின் விலை மேலும் குறைவடையும்.

மேலும் நாடளாவிய ரீதியில் நுகர்வோரின் தேவைகளை கண்காணிப்பதற்காக 227 நுகர்வோர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்களின் பிரதான தேவைகள் தொடர்பில் அந்தக் குழுக்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். மலையகத்தில் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. படிப்படியாக அவை தீர்க்கப்படும். – என்றார்.

# மலையக மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேசுவதால் அவர்கள் கௌரவத்துக்குப் பாதிப்பு வராது!

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு



மலையக மக்களின் பிரச்சினைகளை மறைத்துவிட்டு முன்செல்ல முடியாது. அதனால் மலையக மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேசுவதால், அவர்களின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படாது என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி இணைந்துகொண்டுவந்த நாட்டின் தற்போதைய நெருக்கடி தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

60 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒருநேர உணவுக்காக திண்டாடுகின்றனர் என சர்வதேச அமைப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் அரசாங்கம் இதனைப் புரிந்துகொள்ளவில்லை. மக்கள் போராட்டங்களின் ஊடாக மக்கள் ஆணையின் ஊடான அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதுதான். ஆனால், இந்த அரசாங்கமோ வரப்போகும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை காலந்தாழ்த்தும் உபாயங்களையே செய்து வருகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க மக்கள் ஆணைக்கொண்ட அரசாங்கம் அமைய வேண்டும். இந்நாட்டைவிட்டு மக்கள் வெளியேறும் நிலையே ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை 300 இற்கும் அதிகமான இலங்கையர்கள் வியட்நாம் அருகே மீட்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் இருந்து கொண்டு தேர்தலைக் காலந்தாழ்த்தப் பார்ப்பது வெட்கக்கேடானது.

மேலும் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் நாடாளுமன்றத்திலும், ஊடகங்களிலுமே பேசுவதாகக் கூறியவர்கள், மலையக மக்களின் பிரச்சினைகளை சபையில் பேச வேண்டாம் என மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

மலையக மக்களின் பிரச்சினைகளை சபையிலும் சர்வதேசத்திலும் பேச வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகளை மறைத்துவிட்டு முன்செல்ல முடியாது. அதனால் அனைவரும் மலையக மக்களின் பிரச்சினைகளைப் பேச வேண்டும். இது மலையக மக்களின் கௌரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. மலையக மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கே நாடாளுமன்றம் இருக்கிறது. – என்றார்.

# எதிர்க்கட்சிகள் கோரும் தகவல்களை அரசு அவர்களுக்கு வழங்குவதில்லை!

## லக்ஷ்மன் கிரியெல்ல சாடல்



நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கோரும் தகவல்களை அரசாங்கம் வழங்குவதில்லை என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

சர்வதேச நிதியத்தின் உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்காமல் அரசாங்கம் தனது பணிகளைத் தாமதப்படுத்தி வருவதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார். இவ்வாறு நாடாளுமன்றத்தில் பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன எனவும் இது முழு நாடாளுமன்றத்தையும் பாதிக்கும் பிரச்சினை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்கள சுயாதீனத்துக்கு அவமானம்

## பேராயர் கர்தினால் சாட்டை



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல், சட்டமா அதிபர் திணைக்களம் அரச அதிகாரிகள் தேவைக்கு ஏற்ப செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீன தன்மைக்கு அவமானமாகும் என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் ஏனைய தொகுதிகளையும் மக்களுக்கு பகிரங்கப்படுத்துமாறும், அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்கத்தையும், சட்டமா அதிபர் திணைக்களத்தையும் மீண்டும் வலியுறுத்துகிறார் எனப் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு – பொரளையிலுள்ள பேராயர் இல்லத்தில இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், அருட்தந்தை சிறில் காமினியால் பேராயரின் விசேட அறிவித்தல் வாசிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வலுமாறு –

நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிகளால், மக்கள் எதிர்கொண்டுள்ள நிலைமைகளை புதிதாக விளக்கத் தேவையில்லை.

இவ்வாறு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வைக் கோரி போராட்டங்களில் ஈடுபடுகின்ற சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அடக்குமுறைகளும் அதிகரித்துச் செல்கின்றன.

அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து சுதந்திரம், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் என்பன அரசாங்கத்தால் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன.

இதன் போது பயங்கரவாதத் தடைச் சட்டமும் நியாயமற்ற முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சிறிதம்ம தேரர் ஆகியோர் 75 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அவர்களது உடல் நலனும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் எவ்வித அடிப்படைக் காரணமும் இன்றி இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இது இவ்வாறிருக்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுகின்றமை மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாடாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம், உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்ப செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமையைக் கண்டிக்கின்றோம்.

இந்த நிலைமையில் உண்மையில் துரதிஷ்டவசமானதாகும். இது சட்டமா அதிபர் திணைக்களத்தின் நீதிக்கும், அதன் சுயாதீனத் தன்மைக்கும் அவமானமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பில் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களம் ஒதுங்கியுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாதவொரு விடயமாகும்.

அதே போன்று முன்னாள் ஜனாதிபதியிடம் வழங்கப்படவிருந்த சாட்சிகள் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பொது மக்களிடம் மறைக்கப்படுகின்றமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளையும் மறைக்கும் செயற்பாடாகும்.

இவ்வாறு மறைக்கப்பட்டுள்ள அறிக்கையின் ஏனைய தொகுதிகளை உடனடியாக மக்களுக்கு பகிரங்கப்படுத்துமாறும், இந்த தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுமாறும் அரசாங்கத்திடமும், சட்டமா அதிபர் திணைக்களத்திடமும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டினுள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதையும் உடனடியாக நிறுத்த வேண்டும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலை பிற்போட இடமளிக்கமுடியாது!

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



தேர்தலை பிற்போடும் அவசர ஆயுதமாக எல்லை நிர்ணய விவகாரம் காணப்படுகிறது. முழு நாட்டு மக்களும் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகிறார்கள்.

தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது. நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள பின்னணியில் நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகிறதா என்ற கேள்வியை சபையில் பலமுறை முன்வைத்துள்ளோம்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக் குறைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் துறையை மேம்படுத்தவேண்டும்.

சுற்றுலாத்துறை சேவை கைத் தொழிலை மேம்படுத்த நடைமுறைக்கு பொருத்தமான எந்த திட்டங்களையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

சுற்றுலா வலயங்கள் உள்ள பகுதிகளில் மின் விநியோகம் நாளாந்தம் துண்டிக்கப்படுகிறது. எரிபொருள் பற்றாக் குறை உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணுங்கள்.

போராட்டங்களால் சுற்றுலாத்துறை சேவை பாதிக்கப்படாது. நாட்டு மக்கள் சுதந்திரமான முறையில், ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபடும் சூழல் காணப்படும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள். போராட்டத்தால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாட்டில் பயங்கரவாதம் கிடையாது. ஆனால் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துகிறது. நாட்டில் பயங்கரவாத செயற்பாடுகள் உள்ளன என்ற செய்தியை அரசாங்கமே சர்வதேசத்துக்கு கொண்டு செல்கிறது, சுற்றுலா சேவைத்துறைக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கமே மேற்கொள்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரச நிதி மோசடி செய்வது நிறுத்தப்படவில்லை. எரிபொருள் உள்ளிட்ட முக்கிய கொள்வனவுகளின் போது அரச நிதி மோசடி செய்யப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகிறது.

நாட்டை பொருளாதார நெருக்கடிக்கு தள்ளிய அரச தலைவர் குடும்பத்துடன் வாழ்நாள் முழுவதும் சுகமாக வாழ்வதற்கு நாட்டு மக்கள் மீது வரி சுமை விதிக்கப்பட்டுள்ளது.

காலையில் உலாவுவதற்கு 30 இராணுவத்தினர்கள் பாதுகாப்பு நிமித்தம் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதற்கு மாத்திரம் நாளாந்தம் ஒன்றரை லட்சம் ரூபா செலவாகுகிறது. ஆகவே அரசாங்கம் நாட்டு மக்களுக்கு உண்மைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சிமன்ற சபை தேர்தல் எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நிச்சயம் நடத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாக உயர்வடைந்துள்ளதை குறைக்க வேண்டும். உள்ளூராட்சி மன்ற சட்டம் உருவாக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போது இதுவரை பிரதேச சபை உறுப்பினர் எண்ணிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தாமல் தற்போது அவதானம் செலுத்தியுள்ளமை சந்தேகத்திற்குரியது.

தேர்தலை பிற்போடும் அவசர ஆயுதமாக எல்லை நிர்ணய விவகாரம் காணப்படுகிறது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் எல்லை நிர்ணய அறிக்கையை முன்னிலைப்படுத்தி மாகாண சபை தேர்தலை காலவரையறையின்றி பிற்போடும் சூழலை ஏற்படுத்தினார்.

நல்லாட்சி அரசாங்கம் 2018ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தது. அறிக்கை தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்போதைய சபாநாயகர் அப்போதை ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எல்லை நிர்ணய அறிக்கை மீளாய்வு குழுவை நியமித்தார்.

இரண்டு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட போதும், இதுவரை அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

முழு நாட்டு மக்களும் தேர்தலை கோரி நிற்கும் நிலையில் அரசாங்கம் தனது இருப்பிற்காக உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தலை பிற்போட முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. – என்றார்.

# உள்ளூராட்சி தேர்தலில் எவ்வித தாக்கத்தையும் எல்லை நிர்ணய செயற்பாடுகள் ஏற்படுத்தமாட்டா!

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தெரிவிப்பு

எல்லை நிர்ணய செயற்பாடுகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது. எனவே உரிய காலத்தில் ஆணைக்குழுவால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த முடியும்.

தற்போதுள்ள தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் பின்னர் எல்லை நிர்ணய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே தேர்தல் காலம் தாழ்த்தப்படும் என்று எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டுள்ளமை தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான திட்டமாகும் என்று பல தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், இது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் –

எல்லை நிர்ணயம் உள்ளூராட்சித் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு ஏதுவான காரணியாக அமையாது. தற்போதுள்ள தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் பின்னர் எல்லை நிர்ணய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே தேர்தல் காலம் தாழ்த்தப்படும். ஆனால் தற்போது அவ்வாறு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையல்லவா?

தற்போது தொகுதிகள் காணப்படுகின்றன. தேர்தல் முறைமையும் காணப்படுகிறது. தொகுதிகளை மாற்றுமாறு எமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கேற்ப நாம் அவற்றை மாற்றிக் கொண்டிருக்கின்றோம். நாம் எல்லை நிர்ணய செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம். நீங்கள் தேர்தலை நடத்தாதீர்கள் என்று எம்மால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா?

தற்போதுள்ள முறைமையின் கீழ் தேர்தல் நடத்தப்படும் போது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8 ஆயிரம் பேர் நியமிக்கப்படுவர்.

எம்மால் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் எதிர்வரும் தேர்தலில் இந்த எண்ணிக்கையைக் குறைக்க முடியும். தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு எவ்வித தடைகளும் இல்லை.

அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலன்றி, வேறு எந்த வகையிலும் 2024 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது.

தற்போது நாடாளுமன்றத்திலுள்ள அனைவரும் இணக்கம் தெரிவித்தால் யோசனையொன்றை சமர்ப்பித்து அதனை நிறைவேற்றி பொதுத் தேர்தலுக்குச் செல்ல முடியும். அவ்வாறில்லையெனில் 2023 மார்ச் மாதத்தின் பின்னர் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். பொருளாதார நெருக்கடிகளுக்கு ஏற்ப திட்டமிட்டு மிகக் குறைந்த செலவில் தேர்தலை நடத்த முடியும். ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டுமெனில் இவ்வாறான செலவுகள் தவிர்க்க முடியாதவையாகும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2022இல் வெளியிடப்பெற்றது.